[18th January 1964

(v) Rules regarding the procedure for the grant of pensions have also been amended suitably.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அமைச்சர் அவர்கள் படித்த விவரங்களிலிருந்துகூட துரிதமாகப் பென்ஷன் பட்டுவாடா செய்வதற்கு உத்தரவாதம் இருக்குமென்று நம்புவதற்கு இல்லை. முன்னைவிட மோசமாக இருக்காது என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். இது ஆசிரியர்களுக்கு மட்டும் பிரத்தியேகமாகாது. மற்ற அரசாங்க அதிகாரிகளுக்கும் பொருந்தும். எனக்குக்கூட நேரடியாகத் தெரியும், ஒரு கேசில் 1½ வருஷமாகியும்கூட இறுதி உத்தரவு போடவில்லை. ஆகவே ஒன்று செய்வார்களா? ரிட்டையர் ஆனவுடன் உத்தேசமான ஒரு பென்ஷன் தொகையைக் கொடுத்து, இடைக்கால உத்தரவு போட்டு, வேண்டுமானால் 3 அல்லது 6 மாதங்களில் இறுதியான முடிவு செய்ய வேண்டுமென்று ஒரு காலவரம்பை நிர்ணயிக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் இப்பொழுது குறிப்பிட்டது எல்லாம் ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல, மற்றைய அதிகாரிகளுக்கும் பொருந்தும். பென்ஷன் கொடுப்பதிலே தவறுதல் ஏற்படக் கூடாது. பென்ஷன் அதிகமாகக் கொடுத்துவிட்டால், பின்னர் தகராறு ஏற்படும். ரிக்கவர் பண்ணவேண்டிய நிமித்தம் ஏற்படலாம். ஆகவே நன்றாகப் பார்த்துக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்பொழுது நான் குறிப்பிட்ட ஏற்பாடுகளை மேலும் விரிவுபடுத்த வேண்டிய அவசியமில்லை என்று நான் கருதுகிறேன். நாளாவட்டத்தில் மேலும் காலதாமதம் ஏற்படுகிறது என்று தெரிந்தால், அதற்குப் பிறகு வேறு என்ன ஏற்பாடுகள் செய்யலாம் என்பதைப் பற்றி யோசிக்கலாம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : முதியோர்களுக்கு அனுப்பும் பென்ஷனை மணியார்டர் மூலம் அனுப்புவது போல, ரிட்டையர் ஆன அதிகாரிகளுக்கும் மணியார்டர் மூலம் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்குத் தனிக்கேள்வி போட வேண்டும்.

திரு. கரு. சீமைச்சாமி : 15 ஆண்டுகள் தொடர்ந்து சேவை செய்த சட்டசபை அங்கத்தினர்களுக்கும் பென்ஷன் திட்டம் விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பற்றி கனம் அங்கத்தினர் நான் அஃபிஷியல் டே வரும்பொழுது, தீர்மானம் கொண்டு வரலாம்.

Physical Instructors (qualifications)

* 24 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Ramanathapuram District Teachers' Guild has sent a resolution requesting the Government to fix the Physical

18th January 1964]

Education Teachers' Certificate of the Lower Grade as the minimum qualification for Physical Education Teachers working in Secondary Schools; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) Does not arise.

திரு. செ. மாதவன் : இந்த லோயர் கிரேடு செர்டிபிகேட் வாங்கியிருக்கிறவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படவேண்டிய ஒரு சூழ்நிலையும், அவர்களுக்கு பஞ்சப்படி, சம்பளம் முதலியன குறைக்கப்பட்டிருககிற ஒரு நிலையும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா? இந்த லோயர் கிரேட் ஆசிரியர்களை பள்ளிகளில் நியமிக்கலாம் என்ற அனுமதியை அரசாங்கம் வழங்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There are two categories of Physical Training Instructors, viz., Grade I and II. Grade I Physical Training Instructors are S.S.L.C. holders with Higher Grade Certificate in Physical Education, while Grade II are those who have completed S.S.L.C. Examination with Lower Grade Certificate in Physical Education. These teachers are eligible for pay in the scales of Rs. 90–140, if they possess a Lower Grade Certificate in Physical Education and pay in the above scale plus a special pay of Rs. 5 if they possess higher grade certificate. The Government have also sanctioned the payment of a special pay of Rs. 10 per mensem to the Physical Training Instructors and Instructress who possess the Teachers Training Certificate of the Secondary Schools in addition to the qualifications prescribed in Physical Education and this special pay is in addition to the pay in the scale of Rs. 90–140.

திரு. செ. மாதவன் : செகண்டரிப் பள்ளிகளில் லோயர் கிரேட் செர்டடிபிகேட் வைத்திருப்பவர்களை ஆசிரியர்களாக நியமிக்கக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறதா? அதன் காரணமாக லோயர் கிரேட் படித்தவர்கள் ஆசிரியர் பதவியிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பே 'இல்லை' என்று விடை அளித்தேன்.

Thanjavur Treasury (Misappropriation)

* 25 Q.—SRI RAMA ARANGANNAL (on behalf of SRI K. A. MATHIALAGAN) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Police investigation for taking up criminal proceedings regarding misappropriation in the Thanjavur Treasury in 1961 has been completed; and

(b) if so, the reason for the inordinate delay in taking action against the concerned persons?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) The question does not arise.